மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT
No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 104 | 14.07.2023 (வெள்ளிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 08 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கு பிரதமர் மோடி அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்

## உயர்ஸ்தானிகரிடம் தமிழரசுக்கட்சி வலியுறுத்தல்

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி அழுத்தம் பிரயோகிக்கவேண்டுமென இலங்கைத் தமிழரசுக்கட்சி இந்திய உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 20 ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ள நிலையில், தமிழர் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் பிரயோகிக்கவேண்டிய விடயங்கள் குறித்து தமிழ்த்தேசிய கட்சிகள் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளன.

அதன்படி, ஜனாதிபதியிடம் சமஷ்டி முறையிலான தீர்வையே இந்தியா வலியுறுத்தவேண்டுமென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் மக்கள்



பக்கம் 4

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்டஈடு..! எமக்கு நீதியே வேண்டும்..!

### மனுவல் உதயச்சந்திரா ஆதங்கம்..!



பக்கம் 4

நாங்கள் ஒருபோதும் மரணச்சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ள தயார் இல்லை.ஒப்படைக்கப்பட்ட எமது

# மீண்டும் ஒருமுறை தமிழருக்கு எதிரான ஒரு சூழல் அமைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது!



பக்கம் 4

## சாணக்கியன் எம்.பி எச்சரிக்கை!!

மீண்டும் ஒருமுறை தமிழருக்கு எதிரான ஒரு சூழல் அமைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்நாட்டுக்குள்ளே பிரச்சனைகளை தீர்க்காமல் இருப்பதற்கு தங்களுக்கும் மொட்டு கட்சியினருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு விட்டதாக காட்டுவதற்கான முயற்சியினை மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தற்பொழுது நாட்டிலே நடக்கும் விடயங்களைப் பார்த்தால் மீண்டும் ஒருமுறை தமிழருக்கு எதிரான ஒரு சூழல் அமைவதற்கான சாத்தியங்கள் தெரிகின்றது.

மிக அவதானமாக நாங்கள் செயல்பட வேண்டிய காலப்பகுதி இதிலேயே குறிப்பாக அண்மையிலே சரத் வீரசேகர அவர்கள் எங்களுடைய

## எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணையா?

### தமிழ் அரசியல்வாதிகள் மீது கமல் குணரத்ன பாய்ச்சல்!



பக்கம் 4

"எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணை, சர்வதேச கண்காணிப்பை கேட்பது சிறுபிள்ளைத்தனமானது. அவ்வாறு செய்யாதீர்கள்" - என்று தமிழ் அரசியல்வாதிகளை கோரியுள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன.

## தமிழர்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ள மனிதப் புதைகுழி!!




பக்கம் 4

1984 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிகின்ற வரைக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடைய முழுமையான ஆக்கிரமிப்பு பிரதேசமாக இருந்த கொக்குத்தொடுவாய் பகுதியிலே பாரிய மனிதப் புதைகுழி கண்டெடுக்கப்பட்டதென்பது தமிழ் மக்கள் மத்தியிலேயே பாரிய அச்சத்தை - பதட்டத்தை ஏற்படுத்தி இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு : கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு எப்போது?

### நீதிமன்றில் தீர்மானம்!



பக்கம் 2

முல்லைத்தீவு -கொக்குத்தொடுவாய் பகுதியில் 29.06,2023 அன்று விடுதலைப் புலிகளின் சீருடையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற சீருடைகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலான அகழ்வு பணிகள் கடந்த வியாழக்கிழமை (6) இடம்பெற்ற நிலையில் பல எழும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் அன்றைய தினம் ஆரம்பமான அகழ்வு பணியின் போது முன்னதாக அடையாளம் காணப்பட்ட எழும்புக்கூடுகளுக்கு அருகில் காணப்பட்ட பகுதிகள் தோண்டப்பட்ட நிலையில், மேலும் பல எழும்புக்கூடுகள்



பக்கம் 2

## குருந்தூர் மலையில் இன்று பொங்கல்!

### இனவாதத்தை தூண்டி சிங்களவர்களை அணிதிரட்டும் பௌத்த தேரர்!

## மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் 34வது ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஸ்டிப்பு..!









மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 34வது ஆண்டு நினைவேந்தல் நேற்றையதினம் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னால் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி, மலர் அஞ்சலி தூவி நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மனித உரிமைகள் தொடர்பான சட்டம் அனைத்து நாட்டிற்கும் பொதுவானதே..!மஞ்சுளாதேவி சதீசன் கருத்து..!



மனித உரிமையை பெற்றுக் கொள்வதற்கு அந்த நாடுகளின் சட்டங்கள் எதிராக இருப்பினும், மனித உரிமைகள் தொடர்பான சட்டம் அனைத்து நாட்டிற்கும் பொதுவானது என மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கான மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் மனித உரிமை தொடர்பான கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

மனித உரிமை தொடர்பான நல்ல கல்வியானது சிறு வயது முதலே வழங்கப்பட வேண்டும். அதன் மூலமாகவே மற்றவர்களின் மனித உரிமையினை கொடுக்கின்ற பண்பினையும் தனக்கு என்ன?என்ன? மனித உரிமைகள் உள்ளன என்ற பண்பினையும் வளர்த்து கொள்ள முடியும்.

எமது தேவைகளை பெற்று கொள்வதற்காக நாம் வெளியில் சண்டை பிடித்தால் கைது செய்யப்படலாம். அல்லது அந்த உரிமையினை வழங்காது மறுக்கலாம்.

ஆகவே, மனித உரிமை கல்வியை பெற்றவர்கள் அதனை சிறப்பாக பயன்படுத்தி இந்த சட்டம் தொடர்பான அறிவற்றவர்களிற்கு விளக்கமளித்து, அவர்களது பிரச்சினைகளில் துணையாக இருந்து அதிலிருந்து அவர்களை தூக்கி விடுதல் வேண்டும்.

மனித உரிமை சட்டம் என்பது எல்லா நாட்டிற்கும் பொதுவான சட்டம். ஆயினும் ஒவ்வொரு நாட்டிற்கும் இடையிலான சட்டமே வேறுபட்டதாக இருக்கும். இந்த நாட்டில் குற்றம் செய்தாலும் வேறு நாட்டில் தப்பித்து கொள்ளகூடிய சூழ்நிலையுள்ளது.

உரிமையை பெற்றுக்கொள்வதற்கு அந்த நாடுகளின் சட்டங்கள் எதிராக இருப்பினும், மனித உரிமைகள் தொடர்பான சட்டம் அனைத்து நாட்டிற்கும் பொதுவானதே.

சட்ட ரீதியான சில பிரச்சினைகளை சந்திக்கும் போது, நீதி மற்றும் நேர்மையாக இருக்க வேண்டும். சில சட்டங்களில் இருந்து மக்கள் தப்பிக்க சட்டத்திலுள்ள ஓட்டையை பயன்படுத்தி நீதியை தவற விடுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## அரசியல் இலாபம் கருதி செயற்படும் தமிழ்த் தரப்பு..! சமஷ்டி தீர்வை வழங்க நாம் தயாரில்லை..!

# இலங்கை அரசு மீண்டும் திட்டவட்டம்..!



"தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரும் சமஷ்டி தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது. அரசு அதனை அனுமதிக்காது. கூட்டாட்சி என்ற சமஷ்டி எனப்படுவது நாட்டைத் துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது."என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்க் கட்சிகள் கடிதம் அனுப்புவது குறித்து அரசின் நிலைப்பாடு தொடர்பாக ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணம் திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் நிகழும். இலங்கை தொடர்பாக இந்தியத் தரப்புக்குப் பல விடயங்கள் தெரிவிக்கப்படும்.

குறிப்பாக இந்தியா தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றது. இதனால், தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களுக்கு ஜனாதிபதி அதிகம் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை இந்தியத் தரப்புக்குத் தெளிவுபடுத்துவார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு முட்டிமோதிக் கொண்டு கடிதம் அனுப்புவது பயனற்றது. அரசியல் இலாபம் கருதியே தமிழ்க் கட்சிகள் இவ்வாறு நடந்துகொள்கின்றன.

13ஆவது திருத்தச் சட்ட நடைமுறை உடனடி சாத்தியமற்றது. நாடாளுமன்றத்தின் மூலமே இது அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சமஷ்டி தீர்வைக் கோருகின்றன. இது ஒருபோதும் சாத்தியமற்றது. அரசு இதற்கு அனுமதி வழங்காது. கூட்டாட்சி எனப்படும் சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது. இருக்கின்ற அரசமைப்பை மறுசீரமைத்து அல்லது புதிய அரசமைப்பு மூலம் நாட்டு மக்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்துக்குள் வழங்குவார்." - என்றார்.

## முல்லைத்தீவு : கொக்குத்தொ...

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி. கே .நிறஞ்சன் அவர்கள் சர்வதேச நியமங்களை பின்பற்றியும் வைத்தியர்களுக்காக தயாரிக்கப்பட்ட கோவையின் அடிப்படையிலும் முல்லைத்தீவு -கொக்குத் தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளவதாக அடையாளம் காணப்பட்டு அது பாரிய மனித புதைகுழியாக இருக்கலாம் .என்ற அடிப்படையில் குறித்த அகழ்வு பணி தொடர்பில் (13) வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் அனைத்து திணைக்களங்கள் மற்றும் சட்டத்தரணிகளுடன் இடம்பெறும் கலந்துரையாடலின் பின்னர் புதைகுழி தொடர்பான மேலதிக அகழ்வுகள் தொடர்பில் தீர்மானிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று இடம்பெற்ற மனித புதைகுழி தொடர்பான விசேட கலந்துரையாடலில் சட்ட வைத்திய அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

இதன்போது, அழைக்கப்பட்ட நிறுவன பிரதிநிதிகளும் வைத்தியர்களாக வைத்தியர் வாசுதேவ மற்றும் பிரணவன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தார்கள்.

அவர்கள் இந்தப் புதைவழி எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஒட்டுமொத்த நபர்களின் கலந்துரையாடலின் அடிப்படையில், சர்வதேச நியமங்களை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கருத்துரைக்கப்பட்ட நிலையில், ஏற்கனவே வைத்தியர்களுக்கு அவர்களுடைய தயாரிக்கப்பட்ட கோவை ஒன்று காணப்படுவதாக கூறி அதற்கு அமைவாக இந்த அகழ்வை மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரம் எவ்வாறு இந்த மனித புதைகுழி அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என நீதிமன்றத்தால் பல கட்டளைகள், அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், அரசியல்வாதிகள் மற்றும் பல நிறுவனங்களைச் சார்ந்தோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தார்கள். இந்த நிறுவனங்களின் அறிக்கைகளுக்காக தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கைக் காகவும் இந்த வழக்கு அடுத்த வியாழக்கிழமை மீண்டும் அழைக்கப்பட இருக்கிறது என தெரிவித்தார்

## குருந்தூர் மலையில் இன்று!



முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இன்று(14.07.2023) பொங்கல் நிகழ்வு ஒன்றை செய்யவுள்ளதாகவும் அனைவரும் அணிதிரளுமாறும் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடகங்களில் அழைப்பு விடுத்திருந்தார்.

இதன் பின்னணியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் புதன்கிழமை (12.07.2023) முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோருக்கு எதிரான துண்டுபிரசுரங்கள் முல்லைத்தீவு, தண்ணீரூற்று, மற்றும் முள்ளியவளை பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

அண்மையில் குருந்தூர் மலை விவகாரத்தில் அதன் உரிமை மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட சிவில் சமூகத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ரவிகரன் மற்றும் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோருக்கு எதிராக ஒருசிலர் செயற்பட்டுள்ளமையினை காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் இராணுவ புலனாய்வாளர்களின் பின்னணியில் செயற்படுகின்றார்களா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த நிலையில் புதன்கிழமை (12) முல்லைத்தீவு, தண்ணீரூற்று மற்றும் முள்ளியவளை பகுதிகளில் ஒட்டப்பட்ட துண்டு பிரசுரங்களில் இந்து மற்றும் பௌத்த மத நல்லிணக்கத்தினை குலைக்க துரைராசா ரவிகரன் பீற்றர் இளஞ்செழியன் வெளிநாட்டில் இருந்து பணத்தினை பெற்றுக்கொண்டு தீவிரவாத செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள் மக்கள் சிந்தித்து செயற்படவும் என்று எழுதப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் புதன்கிழமை (12) முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பின்னர் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், குறித்த செயற்பாடானது வெலிஓயா சப்புமல்தன்ன விகாரை, மற்றும் குருந்தூர் மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட குருந்தி விகாரை ஆகியவற்றின் விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் மற்றும் அவரோடு இணைந்து செயற்படும் புலனாய்வாளர்கள் மீதும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழர்களால் இந்து ஆலயம் ஒன்று நிறுவப்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அங்கு இன முறுகல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்து நீதிமன்ற கட்டளைகளை மீறி அங்கு விகாரை கட்டுமான பணிகளை முன்னின்று செயற்படுத்திய வெலிஓயா சப்புமல்தன்ன விகாரை மற்றும் குருந்தூர் மலையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட குருந்தி விகாரை ஆகியவற்றின் விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் கடந்த 11 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மூவரின் பெயர்களையும் குறிப்பிட்டு முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் மயூரன் மற்றும் நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரியக்கத்தின் இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகிய மூவருக்கு எதிராக இம்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கல்கமுவ சாந்தபோதி தேரர், முகநூலில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சார்ந்த தமிழ்த் தீவிரவாதிகள் மற்றும் இந்துக் குருமார்களையும் இணைத்து மிகப்பெரிய பூஜை ஒன்றை நடத்தி ஆலயம் ஒன்றை நிறுவ இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு எதிராக இன்று(14) சிங்கள மக்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று முந்தினம் (12) துரைராசா ரவிகரன் பிறிதொரு தேவைக்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்றபோது அவரை அழைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இன்று (14.07.2023) பூஜைகள் நடைபெறும் என ரவிகரன் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

# சடலங்களை எரிப்பதால் வெளியாகும் புகை வீடுகளுக்குள் : மயானத்தை இடம் மாற்றுமாறு கல்லுண்டாய் மக்கள் கோரிக்கை !








ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் இந்து மயானத்தில் சடலங்களை எரிப்பதால் வெளியாகும் புகை வீடுகளுக்குள் வருகிறது.

அந்த புகையை நாங்கள் சுவாசிப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கிறோம் என கல்லூண்டாய் குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் மக்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் எங்களுக்கு இந்த கல்லூண்டாய் பகுதியில் குடியேற்றத்திட்டத்தை அமைத்துக் கொடுத்து, எங்களை இங்கே குடியமர்த்தினார்கள். ஆனால், எங்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எங்களது குடியேற்றத்திட்டத்தில் இருந்து சுமார் 30 மீற்றர் தொலைவில் ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் மயானம் அமைந்துள்ளது.

அந்த மயானத்தில் சடலங்களை எரிக்கின்ற போது வெளியாகும் புகை எமது வீடுகளுக்குள் வருகிறது.

இந்த புகையை சுவாசிப்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகின்றனர்.

இந்த மயானத்தை இடம் மாற்றி, புதிய மயானத்தை அமைப்பதற்கான நிதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதாகவும், தற்போதைய மயானம் இருக்கின்ற இடத்திலிருந்து சற்றே தொலைவில் ஒரு காணியை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஒதுக்கித் தருமானால், அதில் புதிய மயானத்தை அமைக்க முடியும் என வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜெபநேசன், பிரதேச சபையில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி இருந்த காலப்பகுதியில் கூறினார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் இதற்காக சுமார் ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கூறுகின்றார். ஆனால், தற்போது பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சபேசன் புதிய மயானம் அமைப்பதற்கு நிதி இல்லை என்று கூறுகின்றார்.

ஏற்கனவே, வரவு - செலவு திட்டத்தில் மயானம் அமைப்பதற்கு என ஒதுக்கப்பட்ட நிதி எங்கே?

மழைக் காலங்களில் மயானத்தில் இருந்து வெள்ளம் வீடுகளுக்குள் வருகிறது. இதனால் மயானத்தில் எரிக்கின்ற கழிவுகள் வெள்ளத்தோடு வீடுகளுக்குள் வருகின்றன. பருவக்காற்று காலங்களில் பிணம் எரித்த சாம்பல் வீடுகளுக்குள் வருகிறது. இந்த அவல நிலைகள் அதிகாரிகளுக்கு தெரியுமா? இதனால் ஒரு உயிர் போனால் அந்த உயிரை அதிகாரிகளால் வழங்க முடியுமா?

இவ்வாறான சூழ்நிலைகளால் நோய்கள் ஏற்பட்டு சிலர் இங்கு இருக்க முடியாமல் உறவினர்கள் வீடுகளில் வசிக்கின்றனர். அவர்கள் இங்கு வசிக்கவில்லை என கூறி அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மறுக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான அடிப்படை தேவைகளை வழங்காமல், அவர்களை இங்கே இருங்கள் என்று எப்படி கூற முடியும். அவர்களும் உயிருள்ள மனிதர்கள் தானே.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக இதனை கவனத்தில் கொண்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வழங்கிய காணியில் மயானத்தினை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

# ஹரி ஆனந்தசங்கரியின் இலங்கை விஜயம்! விசாவை வழங்க மறுத்த அரசு!!

## பழிவாங்கல் என கருத்து



கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹறி ஆனந்தசங்கரி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான விசாவை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

ஹறிஆனந்தசங்கரி தனது டுவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு ஏற்றதாக காணப்படும் போதே கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

கொடும்பாவிகளை எரிப்பது இலங்கையின் அரசாங்கங்களின் தவறுகளை சரிசெய்யாது.

கவலையளிக்கும் விதத்தில் இலங்கை எனக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. நாங்கள் முன்னெடுத்துள்ள வேலைதிட்டத்திற்காக பழிவாங்கும் நடவடிக்கை இது எங்களை மௌனமாக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலவாரங்களிற்கு முன்னர் சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் வவுனியாவில் கனடா பிரதமர் மற்றும் ஹறி ஆனந்தசங்கரியின் கொடும்பாவிகளை எரித்தமை குறிப்பிடத்தக்கது.

கனடாவின் தமிழர் இனப்படுகொலை நினைவுதினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே இந்த கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

இதேவேளை தமிழர்கள் உரிமைக்கான கனடாவின் ஆதரவிற்கு பதில் நடவடிக்கையாகவே ஹறி ஆனந்தசங்கரிக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது என சமூக ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

# மொரவெவ பிரதேசத்தில் இனங்களுக்கிடையில் முறகலை தோற்றுவிக்க தீய சக்திகள் முயற்சி



மொறவெவ பிரதேசத்தில் இனங்களுக்கிடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் முகமாக தீய சக்திகள் செயற்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டு வருகின்றார்கள்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

மொரவெவ பிரதேச செயலக பிரிவின் கித்துலூத்து கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நான்காம் கண்டம் பகுதியில் கடந்த போயா தினத்தன்று அப்பகுதியில் உள்ள மரம் ஒன்றின் கீழ் இனம் தெரியாத நபர்களினால் பிள்ளையார் சிலை ஒன்று வைக்கப்பட்டதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த மக்களிடம் இலங்கை புலனாய்வு துறையினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஒரு வாரத்தின் பின்னர் அப்பகுதியில் ஒரு அடி உயரமான புத்தர் சிலை ஒன்றும் வைக்கப்பட்டது.

இதனால் அப்பகுதி மக்களிடையே இன முரன்பாடுகள் ஏற்பட்டதையடுத்து தற்போது அவ்விரு சிலைகளும் இனம் தெரியாத நபர்களினால் அகற்றப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் இரு இனத்தவர்களும் சமூகமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருவருகின்ற நிலையில் இப்பகுதியில் மீண்டும் புத்தர் சிலையை வைத்து இன நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிகள் நடப்பதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வடக்கின் போக்குவரத்து துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு – டக்ளஸ் நம்பிக்கை!



வடக்கு மாகாணத்திற்கு தேவையான போக்குவரத்து பேருந்துகள் மற்றும் ஆளணி பற்றாக்கறைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய உதவி திட்டத்தின் உதவியுடன் 24 பேருந்துகளை எமது மாகாணத்திற்கு அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் வழங்க வந்திருப்பதற்கு வடக்கு மாகாண மக்கள் சார்பாக நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய கடன் உதவித் திட்டத்தில் இலங்கைக்கு கிடைத்த பேருந்துக்களில் வடக்கு மாகாணத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 24 பேருந்துகளை இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு மாகாண சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று (13.07.2023) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜன் உட்பட அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறுகையில்,

"எமது மாகாணத்திற்கென 8 பேருந்துகளை ஏற்கனவே வழங்கியமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோல் வடக்கில் உள்ள சில சாலைகளுக்கு முகாமையாளர்களும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனினும் எமது மாகாணத்திற்கு வழங்கப்பட்ட பேருந்துகள் போதாது. மேலும் பேருந்துகள் வேண்டும் என இலங்கை கோக்குவரத்து சபையின் தலைவரிடமும் அமைச்சரிடமும் நான் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருக்கின்றேன்.

சாரதிகள் நடத்துனர்கள் பற்றாக்குறை தொடர்பிலும் தெரியப்படுத்தி அந்த வெற்றிடங்களையும் நிரப்பி தருமாறும் கோரியிருக்கின்றேன். அதை இந்த மேடையிலும் மீண்டும் அவர்களுக்கு நான் நினைவூட்டுகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களிடம் வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் மட்டுமல்லாது மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை விரைவாக தீர்க்க வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை செலுத்தி வருகின்றார்.

அவருக்கும் நான் நன்றிகளை தெரிவித்துக் கொள்கினள்றேன்" என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் 200 பாடசாலைகளுக்கு பூட்டு..! இலவச கல்வியை சீரழித்து மாணவர்களிற்கு

## தொடர்ந்தும் அரசாங்கம் அநீதி..! ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு..!

வடக்கு மாகாணத்தில் 200 பாடசாலைகள் மூடபட்டுள்ள நிலையில் உள்ளன எனவும் போருக்கு பின்னர் 64 பாடசாலைகள் இன்னமும் மீள ஆரம்பிக்கப்படவில்லை எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

100 ற்கும் குறைவான மாணவர்களை கொண்ட பல பாடசாலைகள் மூடப்படும் அபாய நிலையை எதிர்கொண்டுள்ளன.

இலங்கை முழுவதும் தற்பொழுது 35 000 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தலா 2000 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதுடன், கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்து காணப்படுகின்றது.

மூதூர் கல்வி வலயத்தில் 1300 ற்கும் அதிகமான ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆசிரியர் பற்றைக்குறையை உடனடியாக தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.



அது மட்டுமன்றி, இலவச கல்வியை சீரழித்து மாணவர்களிற்கு தொடர்ந்தும் அரசாங்கம் அநீதி இழைத்து வருகின்றது எனவும் தெரிவித்தார்.

## அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்...

தேசிய கூட்டணியும், அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு வலியுறுத்தவேண்டுமென ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தனித்தனியாகக் கடிதங்களைக் கையளித்துள்ளன.

ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையெழுத்திடாத நிலையில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான சந்திப்பொன்று புதன்கிழமை சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும், இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகரும், உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியும் பங்கேற்றிருந்தனர்.

அதன்படி, புதுடில்லியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பின்போது, அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்குமாறு பிரதமர் மோடி அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என்று இரா.சம்பந்தன் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இவ்வாண்டுடன் 36 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையிலும், அதிலுள்ள பல்வேறு முக்கிய விடயங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று உயர்ஸ்தானிகரிடம் சுட்டிக்காட்டியுள்ள தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள், அதில் அதிகாரப்பகிர்வு மிக முக்கியமான விடயம் என்றும், அதனை வழங்குமாறு இந்தியா அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இதனை உடனடியாக பிரதமர் மோடிக்குத் தெரியப்படுத்துவதாகக் குறிப்பிட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்திய விஜயத்தின் பின்னர் மீண்டும் சந்தித்து இதுபற்றிப் பேசலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## காணாமல் ஆக்கப்பட்ட உறவு...

பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது?, நாங்கள் பணத்திற்காக இத்தனை வருடங்கள் வீதியில் நின்று போராடவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை(13) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலக அதிகாரிகள்(ஓ.எம்.பி) மரணச் சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டை பெற்றுக்கொள்ளுமாறு கதைத்து பார்த்தனர்.

ஆனால் அந்த விடையம் சரிவரவில்லை. அதனை தொடர்ந்து ஒவ்வொரு அம்மாக்களையும் அழைத்து பேசி பார்த்தனர். அதுவும் சரிவரவில்லை. ஆனால் தற்போது அரச திணைக்களங்களை அழைத்து பேசுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு மரண சான்றிதழ் மற்றும் நஷ்ட ஈடு வழங்கும் நடவடிக்கை ஒருபோதும் இடம்பெறாது. குறித்த மரண சான்றிதழ் மற்றும் நஷ்ட ஈடு எங்களுக்கு தேவை இல்லை என்பதை ஓ.எம்.பி அலுவலக அதிகாரிகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் கூறி வருகின்றோம்.

பாதிக்கப்பட்ட எங்களுடன் கதைத்து பார்த்தார்கள் சரி வரவில்லை.தற்போது திணைக்களங்களை அழைத்து பேசி பார்க்கின்றார்கள். அதுவும் சரி வராது.நாங்கள் ஒரு போதும் அவர்களின் கோரிக்கைகளுக்கு ஒத்துப் போக மாட்டோம்.

நாங்கள் நீதியை யே கேட்டு நிற்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது?, நாங்கள் பணத்திற்காக இத்தனை வருடங்கள் வீதியில் நின்று போராடவில்லை.

அவ்வாறு காசுக்காக போராடும் அம்மாக்களும் நாங்கள் இல்லை.ஓ.எம்.பி அலுவலக அதிகாரிகள் சகல விதத்திலும் எங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயன்றார்கள். பயனளிக்கவில்லை. இந்த நிலையில் திணைக்கள அதிகாரிகள் ஊடாக எங்களிடம் பேச முற்படுகின்றனர்.

நாங்கள் ஒருபோதும் மரணச் சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டை பெற்றுக்கொள்ள தயார் இல்லை. அரச திணைக்களத்தை வைத்து கதைக்கும் ஓ.எம்.பி அலுவலகத்தினர் மீண்டும் எங்களுடன் கதையுங்கள். என அவர் மேலும் தெரிவித்தார்.

## மீண்டும் ஒருமுறை தமிழரு...

வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ் நீதி அரசர்களை பற்றி கூட குற்றம் சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமாக போய்க் கொண்டிருக்கின்றது.

குருந்தூர் மலையில் தன்னை பேசவிடவில்லை எனக் கூறி ஒரு குற்றச்சாட்டுக்காக நீதி அரசர்கள் புரிந்து கொள்ள வேண்டும் இது சிங்கள நாடு. சிங்கள நாட்டிலே நாங்கள் தான் ஆட்சியாளர்கள் என்று சொல்லி இவ்வாறான மனப்பாங்குகள் காரணத்தினால் தான் நாடு இந்த வங்குரோத்து சூழ்நிலையை அடைந்திருக்கின்றது நாங்களும் பல இடங்களில் இதுபற்றி பேசி இருக்கின்றோம். இதுக்கான தீர்வை காண வேண்டும் ஜனாதிபதி முன்னிலையில் கூட காத்திருக்கின்றோம் ஜூலை 12 ஆம் தேதி ஆகியிருக்கின்றது ஜூலை 30க்கிடையிலே ஒரு முடிவை ஜனாதிபதி சொல்வதாக கூறி இருக்கின்றார்.

ஆனால் இதிலே ஒரு சாதகமான முடிவை சொல்லக்கூடிய சூழல் இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதற்கான காரணம் அண்மை காலமாக நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால் மொட்டுக்கட்சியை தன்னுடைய கட்சியினுடைய மாவட்ட கிளைகள் பிரதேச கிளைகள் தொகுதிகளை போன்ற விடயங்களிலே புனரமைப்புகள் செய்து கூட்டங்களை நடத்திக் கொண்டு வருகின்றார்கள்.

இந்தக் கூட்டங்கள் அனைத்தையும் பார்த்தால் நேரடியாக அரசாங்கத்தை தாக்கும் கருத்துக்களை தான் அவர்கள் முன்வைக்கின்றார்கள் இதிலே வேடிக்கையான விடயம் என்னவென்றால் அரசாங்கத்தின் பங்குதாரர்களாக இருந்து கொண்டு பாராளுமன்றத்திலே அரசாங்கத்திற்கு புதிய சட்டமூலத்தை அமுல் படுத்துவதற்கு தேவை வரும்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் அதனை ஆதாரித்திருக்கின்றார்கள்.

இதிலே அண்மையிலே நடந்த எங்களுடைய ஈ.பி.எப்ஃ மற்றும் ஈ.டி.எப்ஃ மக்களுடைய பணத்தினை அரசாங்கம் தவறாக முடிவுகளின் ஊடாக அந்த பணத்தை அழிக்கும் ஒரு திட்டத்தை கொண்டு வந்த பொழுதும் கூட அந்த வாக்கெடுப்பிலே அதிகளவிலான ஆதரவாக வாக்களித்தவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்கள். இதில் நாமல் ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்சே போன்றவர்கள் கலந்து கொள்ளவில்லை ஆனால் வெளியில் வந்து தாங்கள் ஈ.பி.எப்ஃ மற்றும் ஈ.டி.எப்ஃ இல் கை வைக்க விடமாட்டோம் என ஒருபுறம் சொல்கின்றார்கள் ஆனால் பாராளுமன்றத்தில் அதற்கு ஆதரவாக வாக்களிக்கின்றார்கள்.

இதேபோன்று அண்மை காலமாக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை அதாவது பாராளுமன்ற வளாகத்தின் முன்பாக ஜே.வி.பி ஐ சேர்ந்த சில உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் அவர்கள் அந்த நேரத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் பாராளுமன்றத்திற்கு சென்று விடக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்த ஜே.வி.பியினர் கைது செய்யவில்லை ஒரு விசாரணை கூட செய்யவில்லை தங்களுக்கு அதிருப்தி இருக்கின்றது என நாம ராஜபக்ஷ அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசி இருக்கின்றார்.

இவர்கள் ஆதரவில்லை என்று சொன்னால் இந்த அரசாங்கத்தில் ஏன் இருக்க வேண்டும் இது ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு திட்டமிட்ட செயல்பாடாக தான் நான் பார்க்கின்றேன்.

ஒரு பக்கத்தினால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவேன் என கூறி சர்வதேசத்தினுடைய ஆதரவினை பெற முயற்சி எடுத்து அந்த அனுதாபத்தையும் எடுத்து அதே போன்று உள்நாட்டுக்கு உள்ளே பிரச்சனைகளை தீர்க்காமல் இருப்பதற்கு தங்களுக்கும் மொட்டு கட்சியினருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு விட்டதாக காட்டுவதற்கான முயற்சியினை மேற்கொண்டு இருக்கின்றனர்.

இது ஒரு மிகவும் அவதானமான ஒரு காலப்பகுதி தமிழர்களுக்கு இதிலும் குறிப்பாக தமிழ் தரப்பிலும் கூட மிக கவலையான ஒரு விடயம் அண்மையிலே நான் ஒரு செய்தியில் பார்த்தேன் வவுனியாவில் கரும்பு தோட்டம் செய்வதற்கு 10 ஆயிரத்துக்கு மேல் அதிகமான ஏக்கர் காணிகளை எடுத்து செய்வதற்காக அந்த காணிகளை தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கான முயற்சிகளை எடுத்திருப்பதாக ஒரு செய்தியை பார்க்கக் கூடியதாக இருந்தது.

வவுனியா மாவட்டத்தில் எடுத்துக்கொண்டால் எங்களுடைய தமிழ் உறவுகள் எத்தனையோ பேர் ஒரு சிறிய துண்டு நிலம் கூட இல்லாமல் விவசாயம் செய்வதற்கு சிறிய துண்டு என கூட இல்லாமல் நிலையில் இருக்கின்றார்கள் ஆனால் இதில் கவலையான விடயம் என்னவென்றால் தமிழ் தரப்பில் அதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒரு பங்காளி கட்சியாக டெலோ கட்சியின் ஊடக பேச்சாளர் சுரேன் குருசாமி அவர்கள் பெயர் அந்த கம்பெனியில் அவரும் ஒரு உப தலைவராக பெயர் குறிப்பிட்டு ஒரு செய்தி வந்திருக்கின்றது.

தமிழர்களுடைய நிலைமை இவ்வாறு மோசமாக காணப்படுகின்ற பொழுது தமிழ் தரப்பினை சேர்ந்தவர்கள் ஜனாதிபதியினுடைய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள மாட்டார்கள் எதுவும் செய்யவில்லை ஆனால் அதே நேரத்தில் இவ்வாறான மக்களுக்கு விரோதமான சில செயல்பாடுகளை முன்னெடுக்கின்ற தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தங்களுடைய லாபத்தை சேர்ப்பதற்கு முயற்சிக்கின்ற செய்திகளை பார்க்கும்போது உண்மையிலேயே மன வேதனையை தருகின்றது.

நான் நினைக்கின்றேன் ஜனநாயக போராளிகள் கட்சியினுடைய தலைவர் கதிர் அவர்களும் மக்களுடைய காணிகளை விற்பதாக இருந்தால் என்னத்துக்கு இந்த கூட்டமைப்பு என செய்தி வெளியிட்டு இருந்தார் இதிலே மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

நாங்கள் எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் நாங்கள் எங்களுடைய மக்கள் சிலர் வந்து சில நேரங்களிலேயே இந்த கடந்த கோட்டபாய ராஜபக்ஷவினுடைய காலப்பகுதியிலே மிக நெருக்கடிகளை இந்த அரசாங்கத்தினால் மக்களுக்கு உருவாக்கப்பட்டது ஆனால் தற்பொழுது நிலைமைகள் அவ்வாறாகதான் இருக்கின்றது பிரச்சனைகளுக்கான நிரந்தர தீர்வு இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

காணி பிரச்சினைகள் அனைத்தும் அவ்வாறே இருக்கின்றது எமது மக்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது அரசியல் கைதிகளின் விடையம் அவ்வாறே இருக்கின்றது புதியதொரு டி ஆர் சி யினை கொண்டு வந்து எங்களுடைய பொறுப்பு கூறல் விடயத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி இல்லாமல் செய்ததற்கான செயற்பாடுகளை அலி சப்ரி அவர்கள் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

வராகத்தான் இன்று நிலைமை காணப்படுகின்றது ஆனால் நமது மாவட்டங்களிலும் மாகாணங்களிலும் சில வேலைகளில் நமது மக்கள் தங்களுடைய தேவைகள் இது என்று பார்த்தால் வீதி புணரமைப்பு அல்லது சிறு சிறு சலுகைகளுக்காக எங்களுடைய மக்கள் இந்த சில சில மோசமான நிலையினை ஏற்படுத்திய அரசாங்கத்தின் பங்காளிகளுடன் எங்களுடைய மக்கள் சில நேரங்களில் மறந்து விடக்கூடாது.

நாங்கள் கிடைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் எங்களுடைய மக்கள் நலம் சார்ந்த விடயங்களை பாராளுமன்றத்தில் நாங்கள் முன்வைக்கின்றோம் அவ்வாறாக நாங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கின்ற போது பிரிவினவாதிகள் நாட்டை பிரிக்க முயற்சிக்கின்றார்கள் என தெற்கிலே எங்களுக்கு எதிரான ஒரு அணியை உருவாக்குவதற்கு அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் தெரியும் அவர் ஒரு மிகவும் தந்திரமாக செயல்பட கூடியவர் நரி என்று சொல்வார்கள் இவை அனைத்தும் தமிழ் மக்களினுடைய நிரந்தரமான அரசியல் தீர்வு என்பதற்கான தேவை இல்லை.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் அரசியல் தீர்வை விரும்பவில்லை இது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தமிழரசு கட்சி இல்லாவிட்டால் சாணக்கியன் போன்ற ஒரு சிலரின் தேவைக்காக இதை பேசுகின்றார்கள் என்று தெற்கிலேயும் சர்வதேசத்திலும் சொல்கின்ற அளவிற்கு நிலைமை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கின்றார்கள்.

இதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் முதலாவது எங்களுடைய மாவட்டத்தில் இருக்கும் வளங்களை சூறையாடி எங்களுடைய மாவட்டத்தில் வளங்களை அழித்து தங்களுடைய அரசியலில் எதிர்வரும் காலங்களில் செய்வதற்காக பணம் உழைத்துக் கொண்டு மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை ஈடுபாட்டுகின்ற தமிழ் பிரதிநிதிகள் உடனும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோன்றுதான் தாங்களும் தமிழ் தேசியவாதிகள் என காட்டிக்கொண்டு நான் கூறியது போன்று பத்தாயிரம் மீட்டர் கரும்பு செய்தற்காக தங்களுடைய இருக்கும் தொடர்புகளை பயன்படுத்தி அரசுக்கு எதிர்ப்பு என காண்பித்து இவ்வாறாக தனியாரிடமிருந்து லாபம் பெறுபவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல சரத் வீரசேகர, நாமல் ராஜபக்ச போன்ற இனவாதத்தை மீண்டும் இந்த நாட்டுக்குள்ளே கொண்டு வந்து தங்களுடைய அரசியல் லாபத்தை தேடுபவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல இவர்களை அனைவரையும் வைத்துக்கொண்டு இயக்கி தமிழ் மக்களின் தீர்வு தேவை இல்லை என்று சொல்ல முயற்சி எடுக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களிடமும் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

## எடுத்ததற்கெல்லாம் சர்வ...

கொக்கிளாய் மனிதப் புதைகுழி விவகாரம், இது தொடர்பில் சர்வதேச விசாரணை கண்காணிப்பு அவசியம் என்று தமிழ் அரசியல்வாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்தநிலையில் இது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"வன்னிப் பிரதேசம் யுத்தம் நடந்த பூமி. இங்கு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே அது தோண்டப்பட்டு - விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சம்பவங்கள் நடக்கும் இடங்களில் அரச புலனாய்வாளர்களின் பிரசன்னம் இருக்கும். இதனைத் தவிர்க்க முடியாது. அது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் கண்டனம் தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் நீதிமன்ற உத்தரவில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல்வாதிகள் எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணை, சர்வதேச கண்காணிப்பு என்று கோருவது சிறுபிள்ளைத்தனமானது.

உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்கான பணிகள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நடைபெறும்." - என்றார்.

## தமிழர்கள் மத்தியில் பாரிய...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம்தொடர்பில் வியாழக்கிழமை (13) விசேட கலந்துரையாடலில் பற்கேற்ற பின் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் கருத்து தெரிவிகையில்

யுத்தம் முடிந்த காலப்பகுதியில் வட்டுவாகலில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்த பெருமளவானவர்கள் இராணுவத்தினரின் பேருந்துகளில் ஏற்றப்பட்டு இவ்வாறான பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என்ற செய்தி அந்த நாளில் இருந்தே வெளிவந்து கொண்டிருந்தது. அவ்வாறான நிலைமையில் இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பாரிய பதட்டத்தை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்தி இருக்கிறது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் அரசியல் தரப்புகள் எல்லாம் இந்த அகழ்வானது சர்வதேச நியமங்களுக்கு அமைய சர்வதேச கண்காணிப்பின் கீழ் அகழ்வுப் பணிகள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எங்களை பொறுத்தவரையில் உள்நாட்டிலே இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற அகழ் வுகள் மூலமாக தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பது தான் எங்களுடைய அனுபவமாக இருக்கிறது. அந்த வகையிலே, எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த வாரம் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பாக வலியுறுத்தி இருக்கின்றார்.

# உகந்தை மலை முருகன் ஆலய ஆடி வேல் விழா

## கொடியேற்றம் யூலை 18இல் ஆக.02இல் தீர்த்தம்





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் எதிர்வரும் யூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதா ராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடை பெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஆகஸ்ட் 02ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம். சுது நிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

வழக்கம்போல அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இம்முறை கதிர்காமம் உற்சவம் முன்கூட்டியே நிறைவடைந்திருப்பதால் உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல்விழா மிகவும் சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 108 டெங்கு நோயாளர்கள் உயிரிழப்பின்றி காப்பாற்றப்பட்டனர்!






கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த ஆறு மாதங்களில் அனுமதிக்கப்பட்ட 108 டெங்கு நோயாளிகளும் எவ்வித உயிரிழப்பு மின்றி காப்பாற்றப்பட்டு வீடு திரும்பியுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரனின் சிறந்த நிருவாகத்தின் கீழ் நோயாளர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்படுவது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் கடந்த ஆறு மாத காலத்தில் வைத்தியசாலைக்கு வருகை தந்த பல்வேறு தொற்று நோயாளர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயாளர்கள் (Dengue) 108 , எலிக்காய்ச்சல் நோயாளர்கள் (leptospirosis) 04, வயிற்றுப் போக்கு நோயாளர்கள் (Dysentert) 10, மூளைக் காய்ச்சல் நோயாளர்கள் (Meningitis) 03, சின்னம்மை நோயாளர்கள் (Measles) 05, கொப்பளிப்பான் நோயாளர்கள் (Chicken pox) 13, காச நோய் நோயாளர்கள் (Tuberculosis) 15 பேருக்கும் சிறந்த முறையில் சிகிச்சைகள் வழங்கப் பட்டு குணமடைந்து வீடு சென்றுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு டெங்கு நோயாளர்களுக்கும் உயிராபத்துக்கள் ஏற்படாமல் பராமரிப்புகள் வழங்கப்பட்டு குணமடைந்து வீடு சென்றமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும் என்று தொற்று கட்டுப்பாட்டு பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

# மண்டூரில் புதிய கலப்பின சோளம் விதைகள் அறிமுகம்!





மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தினால் வழங்கி வைக்கப்பட்ட உள்ளூர் கலப்பின சோளம் விதைகள் அறிமுகம் செய்யப்பட்டு, புதிய நடுகை முறையில் மண்டூர் விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட தம்பலவத்தை கிராமத்தில் நடுகை செய்யப்பட்டது.

அதன் வெற்றிகரமான அறுவடை விழா தொழில்நுட்ப உத்தியோகத்தர் குலசிங்கம் கிலசனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா கௌரவ அதிதிகளாக வலயம் தெற்கு உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல் மண்டூர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன் மேலும் பாடவிதான உத்தியோகத்தர் லக்ஸ்மன் விவசாய போதனாசிரியர் கோபி மற்றும் விவசாயிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

கலப்பின சோளம் விதைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு நடுகை செய்யப்பட்டுவரும் நிலையில், உள்ளூர் கலப்பின சோளம் விதைகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த உள்ளூர் கலப்பின சோளம் விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

அதனை படைப்புழு தாக்கத்தையும் எதிர் கொள்ளும் வகையில் புதிய நடுகைமுறையில் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட விவசாய கிணற்றில் கீழ் செய்கை பண்ணப்பட்டு தயாபரன் எனும் விவசாயி விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட புதிய தொழில்நுட்ப முறைகளை சரியான முறையில் பின்பற்றி வெற்றிகரமான அறுவடையை பெற்றுள்ளார்.

# மாவடிப்பள்ளி அஸ்ரப் வித்தியாலய புதிய அதிபராக ஸம்ஸம் மற்றும் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய நிரந்தர அதிபராக ஆரிப் ஆகியோர் பொறுப்பேற்றனர். !!



கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி கமு/கமு/ அல்- அஸ்ரப் மகா வித்தியாலய அதிபராக முன்னாள் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியான அதிபர் தரம் ஒன்றை சேர்ந்த வீ.எம். ஸம்ஸம் நேற்று பொறுப்பேற்றார் அப்பாடசாலையின் தற்காலிய அதிபராக பதவிவகித்த ஏ.எல்.ரஜாப்தீன் புதிய அதிபரிடம் பாடசாலையின் பொறுப்புக்களை கையளித்தார்.

காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே. டேவிட் முன்னிலையில் தமது பொறுப்புக்களை கையேற்ற புதிய அதிபர் தாம் இந்த பாடசாலையை மேலும் கல்வி ரீதியாகவும், ஏனைய இணைப்பாடவிதான ரீதியாகவும் முன்னேற்ற முழுமையாக பணியாற்ற தயாராக உள்ளதாக தெரிவித்தார். தான் பொறுப்பேற்று குறுகிய காலத்தில் பாடசாலையை சிறப்பாக வழிநடத்திய ஏ.எல்.ரஜாப்தீனின் நிர்வாக ஆளுமையை பிரதிக்கல்வி பணிப்பாளர் ஜிஹானா ஆலிப் பாராட்டி அவரது சேவை மிகவிரைவில் இன்னுமொரு பாடசாலைக்கு நிரந்தரமாக கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துரைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர்களான எம்.எச். றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப், உதவிக்கல்வி பணிப்பாளர் ஏ. அஸ்மா மலிக், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே. டேவிட், கமு/கமு/ அல்-ஹுசைன் வித்தியாலய அதிபர் ஏ.எல். எம்.ஏ. நஸீர், கிழக்கு மாகாண ஜஊவு பேரவை பணிப்பாளர் யூ.எல்.என். ஹுதா உமர், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபராக அப்பாடசாலையின் தற்காலிய அதிபராக கடமையாற்றி வந்த எம்.எஸ்.எம். ஆரிப் நிரந்தர அதிபராக நேற்று உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம்.ஏ. மலிக் முன்னிலையில் பொறுப்பேற்று கொண்டார். இந்நிகழ்வில் அப்பாடசாலையின் ஸ்தாபக அதிபர் ஏ.எல்.எம். நாவித், கிழக்கு மாகாண ICT பேரவை பணிப்பாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், பாடசாலை ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# 100 ரூபாய் மேலதிகமாக பெற்றமைக்காக

## ஒரு லட்ச ரூபாய் தண்டம்!

டெங்கு இரத்தப் பரிசோதனைக்காக பெறப்படும் ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கு பதிலாக 1300 ரூபாய் பெற்றதற்காக அந்த உரிமையாளருக்கு ஒரு லட்ச ரூபாய் தண்ட பணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

இச் சம்பவம் நேற்று (13) வியாழக்கிழமை அக்கரைப்பற்றில் இடம் பெற்றது. அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள இரத்த ஆய்வு கூடம் ஒன்றில் இரத்த பரிசோதனைக்காக 100 ரூபாய் மேலதி கமாக பெற்றமைக்காக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை எதி ரிக்கு ஒரு லட்ச ரூபாய் தண்டப்பணம் விதித்தது.

அரசினால் நிர்ணயம் செய்தத இரத்த மாதிரி பெறுவதற்காக ஆயிரத்து 200 ரூபாய் வழங்கப்படுவது வழக்கம்.

அந்த வகையிலே அக்கரைப்பற்றை சேர்ந்த ஒருவர் அந்த இரத்த ஆய்வு கூடத்தில் இரத்த பரிசோதனை செய்திருக்கின்றார். அதற்கு பெற வேண்டியது 1200 ரூபாய் ஆனால் 1300 அவர் பெற்றிருந்தார். அவர் நேரடியாக நுகர்வோர் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்ததன் பேரில் அதிகார சபையினர் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கை நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்து இருந்தனர்.

இந்த வழக்கை ஏற்றுக் கொண்ட அக்கரைப் பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்சா விசாரித்த பொழுது குறித்த ஆய்வு கூட உரிமையாளர் தான் 1300 பெற்றதை ஒத்துக் கொண்டார்.

அதனையடுத்து எதிரிக்கு ஒரு லட்ச ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.



# சாய்ந்தமருதிலும் ஆபத்தான நிலையிலுள்ள ஒரு ஒடுக்கமான பாலம் : அச்சத்தில் மக்கள்



சாய்ந்தமருது பழைய வைத்தியசாலை வீதியிலுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் அந்த பாலத்தில் பயணிப்போர் அச்சத்துடனே பயணித்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலை, உப தபாலகம், பாடசாலை, பள்ளிவாசல்கள் மற்றும் தொழில் நிமித்தமான பயணங்களை மேற்கொள்வோர் இந்த பாலத்தின் வழியே பயணிக்கின்றனர். எனவே அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியாக விஸ்தரிப்பு செய்யப்பட வேண்டும் என்பது சாய்ந்தமருது மக்களின் விருப்பமாகும்.

இருப்பினும் இந்த பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இந்த பிரச்சினைக்கு தீர்வை தருவதாக தேர்தல் காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் அவை எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை என விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் தமக்கான உச்சகட்ட அதிகாரத்தை பயன்படுத்தி இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வர வேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தப் பாலம் 5 கோடி ரூபாய் செலவில் புணரமைப்பு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# மட்டுவில் ஆயுள்வேத மத்திய மருந்தக திறந்து வைத்து மக்கள் பாவனைக்கு கையளித்து வைத்த கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ், மாகாண விஷேட செயற்பாடுகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையில் (PSDG) ரூபா. 13 மில்லியன் செலவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மேற்பார்வையோடு மட்டக்களப்பு - திக்கோடை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் திறந்து வைத்து பொதுமக்கள் பாவனைக்கும் கையளித்து வைத்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஞீதர் தலைமையில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை திறந்து வைத்து பொதுமக்கள் பாவனைக்கும் கையளித்து வைக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கணகமுத்து கிரிஷ்னப்பிள்ளை, வெல்லாவெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி, புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் (திருமதி) ஜே.பாஸ்கரன், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.ஏ.நபீல், மாகாண சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




சரவணபவன் பென்சி கவுஸ் இன்

மாபெரும் ஆடித் தள்ளுபடி!

கொழும்பு மொத்த விலையில்

30% விலைக் கழிவுடன்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள் | கிறீம் வகைகள் | பான்சி வகைகள் | பாட்டா வகைகள் |
சில்வர் | மாபிள் | அலுமினியப் பொருட்கள் | சோடனைப் பொருட்கள் |
விளையாட்டுப் பொருட்கள் | மணிக்கூட்டு வகைகள் | தையல் உபகரணங்கள் |
அன்பளிப்பு பொருட்கள் | மொடல் பட்டின்கள் | குடைகள் | அழகுசாதன பொருட்கள் |
மாஸ்க் வகைகள் | பாடசாலை உபகரணங்கள் | பாக் வகைகள் இன்னும் பல
பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர் : தே.கலைதாசன் (கரன்) 021 3155 900


ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala
காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்
Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069


சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016
யாழ்ப்பாணம்
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004


காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
மகாநதி ஜ்வல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025


STUDIO
Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL
PHOTOGRAPHY
PHOTOGRAPHY STUDIO
BOOK NOW
+94 777 47 4498
EVENT | VIDEO | FASHION | WEDDING |
CORPORATE | MATERNITY | COMMERCIAL |
STUDIOS | FRAMES | ALBUM DESIGNING |
ALBUM MAKING | VIDEO EDITING | MUG &
ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.


அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேனி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |









இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.